செய்தி வெளியீடு எண்: 56 நாள்:13.05.2021

**<u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடன், உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து காணொளி வாயிலாக ஆய்வு செய்தார்கள்.</u>**

............

இன்று (13.05.2021) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வில் குறிப்பிடும் போது, நோய் தாக்குதலுக்கு ஆளாகியுள்ள மக்களையும், நோய் வராமல் தடுக்கும் முயற்சிகளையும் ஊரக வளர்ச்சித் துறையானது பிற அரசு துறைகளான மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றம் குடும்ப நலன் துறை, காவல் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட வேண்டும் எனவும், இச்செய்தியை இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் இத்துறையிலுள்ள 1.5 இலட்சம் முன்களப் பணியாளர்களுக்கும் கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது, கொரோனா வைரஸ் பரவலின் முதல் அலை அதிகமாக நகரப் பகுதிகளை பாதித்தது. தற்போது இரண்டாவது

அலையானது ஊரகப் பகுதிகளில் அதிக அளவு பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே நாம் கவனத்துடன் இதை கையாண்டு மக்களை இந்நோய் தொற்றிலிருந்து காப்பாற்றி வழிநடத்த வேண்டும் எனவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் ஊரக மக்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இப்பணியில் ஈடுபடுவோர் பணித்தளத்தில் சமூக இடைவெளியை கடைபிடித்து நோய் தொற்று பரவாமல் காத்துக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும் ஊரகப் பகுதிகளில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் குப்பைகளை அகற்றி தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். மக்கள் கூடுகின்ற இடங்களில் குறிப்பாக சுக துக்க காரிய இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவே பொதுமக்கள் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். தமிழகத்தில் குறிப்பாக பத்து மாவட்டங்களில் நோய் தொற்று அதிகமாக உள்ளது. இந்நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் எனவும். உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளையும், இக்கொரோனா தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் இணைத்துக் கொண்டு சிறப்பாக செயல்பட வேண்டும் எனவும் கூறினார்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் நடமாட்டத்தை முற்றிலும் கட்டுப்படுத்தி, நோய் பரவுதலை தடுத்திட வேண்டும் எனவும், அனைத்து இடங்களிலும் சீரான குடிநீர் விநியோகம் மற்றும் நூறு சதவீத தெரு விளக்குகள் எரிவதை உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தியதுடன்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தேவையான அளவு முகக் கவசங்கள், கைகழுவும் திரவம், கிருமி நாசினி போன்றவற்றை உற்பத்தி செய்து உள்ளாட்சி அமைப்பிலுள்ள முன்களப் பணியாளர்களுக்கு வழங்குவதுடன், பொதுமக்களிடையே சமூக இடைவெளியை கடைபிடித்தல், முகக் கவசம் அணிதல், அடிக்கடி கை கழுவுதல் போன்ற பழக்கங்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் எனவும்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களான மளிகை, காய்கறி, பால் பொருட்கள் போன்றவைகள் தடையின்றி கிடைத்திட ஒத்துழைத்தல், முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சமுதாய சமையலறைகளை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் கொரோனா நோய் பாதித்தவர்களுக்கு தடையின்றி உணவு கிடைத்திட ஏற்பாடு செய்திடல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்கு 'மின்–மதி' எனும் செயலி ஏற்கனவே உருவாக்கப்பட்டு, அச்செயலியை 26 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகிறார்கள்.

தற்போது இன்னும் விரைவாக செய்திகளையும், நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள 'மதி குரல்' எனும் ட்விட்டர் சமூக வலை தளக் கணக்கு ஒன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் 13.05.2021 அன்று துவக்கப்பட்டு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த வலைதளத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஆணையர் திரு. கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர்கள், துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**